வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4803/அ3/2022 நாள் .01.2023

---

பொருள் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி – 2022–2023ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள முதுகலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நியமனம் செய்தமை – பணியாற்றி வரும் தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பெறப்பட்டது – 20.07.2022 (ஜூலை 2022) முதல் டிசம்பர் 2022 வரை நிதி ஒதுக்கீடு சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு பகிர்ந்தளித்தல் – சார்பு

பார்வை 1. அரசாணை நிலை (7) பள்ளிக் கல்வி பக(5)த் துறை நாள் 07.01.2023

2. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க. எண்.34087/சி2/இ2/2022 நாள் 09.01.2023

3.சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

---

பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் அரசாணைக்கிணங்க 2022–2023 ஆம் ஆண்டுகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதியும், 10, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணாக்கர்களை பொதுத் தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கு ஏதுவாகவும், அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி சதவீதம் கருதியும், பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக அடிப்படையில் தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு காலிபணியிடங்களை நிரப்பிட ஆணையிடப்பட்டது.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள தற்காலிக பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களில் 175 பட்டதாரி ஆசிரியர்களும், 52 முதுகலை ஆசிரியர் காலிப் பணியிடங்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பட்டதாரி / முதுகலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில் இணைப்பில் கண்டவாறு தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் நிரப்பப்பட்டது.

***அதன்படி நியமனம் செய்யப்பட்ட நபர்களுக்கு அவரவர் நியமனம் செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் அதாவது 20.07.2022 முதல் டிசம்பர் 2022 வரை பணிபுரிந்த நாட்களுக்கான / மாதங்களுக்கான ஊதியம் நேரடியாக சம்பந்தப்பட்ட தற்காலிக ஆசிரியரின் வங்கி கணக்குகளுக்கு ECS முறையில் ஊதியம் பெற்று வழங்க வேண்டும்.*** மேலும் பார்வையில் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பட்டியல் தயாரித்து உரிய கருவூல அலுவலகத்தில் சார்ந்த நபர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கும் அதிகாரம் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது எனவும்,

அந்நபர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கான பற்றுச் சீட்டு பள்ளித் தலைமையாசிரியர்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

***டிசம்பர் 2022 மாதம் வரை ஊதியம் சாா்ந்த ஆசிரியருக்கு பெற்று வழங்கிய ECS Report நகலினை செலவின அறிக்கையுடன் இணைத்து சமா்ப்பித்தால் மட்டுமே சனவரி மற்றும் பிப்ரவரி 2023 மாதங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் சனவரி 2023 மாத ஊதியத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக ஏற்கனவே அனுப்பப்பட்ட படிவத்தில் விவரங்களை பூா்த்தி செய்து வருகைப்பதிவேட்டு நகலுடன் 3 நகல்களில் இவ்வலுவலகத்தில் 2023 பிப்ரவரி 05ஆம் தேதி மாலை 04.00 மணிக்குள் சமா்ப்பிக்க வேண்டும். பிப்ரவரி 2023 மாத ஊதியத்திற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள விவரங்களை 2023 மாா்ச் 05ஆம் தேதி மாலை 04.00 மணிக்குள் சமா்ப்பிக்க வேண்டும்.***

மேற்கண்டவாறு பள்ளி மேலாண்மைக் குழு மூலம் பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரம் மற்றும் டிசம்பர் 2022 வரை செலவிடப்பட்ட தொகை, ஊதியம் பெற்று வழங்கப்பட்ட ECS Report மற்றும் மீதமுள்ள தொகை விவரத்தினை இவ்வலுவலக 'அ3' மற்றும் 'அ4' பிரிவில் 31.01.2023 அன்று மாலை 04.00 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு சாா்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறாா்கள். இத்தொகையினை கீழ்கண்ட தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி
109 அரசு இடைநிலைப்பள்ளிகள் – மாநில செலவினங்கள்–
AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்
மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 333 தொழில்முறை சிறப்பு
பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(து.தொ.கு.2202–02–109–AA 333 – 04)

இணைப்பு :
பள்ளிகளின் பட்டியல் மற்றும்
செலவின அறிக்கை (மாதிரி படிவம்)

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1) பட்டியலிலுள்ள அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
2) மாவட்ட கருவூல அலுவலர் மற்றும் உதவிக் கருவூல அலுவலர்கள், வேலூர் மாவட்டம்
3) இவ்வலுவலக அ2 பிரிவிற்கு IFHRMS மூலம் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி), வேலூர்
வேலூர் மாவட்டம் – (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

# <u>பற்றுச்சீட்டு</u>

2022 – 2023ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு 20.07.2022 முதல் டிசம்பர் 2022 வரை ஊதியம் பெற்று வழங்கப்பட்ட விவரம் பணிந்தனுப்பப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பாடம் | பணிபுரிந்த நாட்கள் | பணிபுரிந்த மாதங்கள் | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்